ஆ, அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*51. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 35/1978).

*52. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1978).

*53. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1978).

*54. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1978).

†55. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் மூன்றாவது (ஆறாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை.

†56. 1972-73 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகளின் மீதும், இந்திய தணிக்கைத் துறை தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கையின் மீதுமான பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை.

†57. உடுக்குறியிடாத வினாப்பட்டியல் (351 முதல் 400 வரை).

இணைப்பு I

[502-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 185-க்கான விடையைக் காண்க].

விவரமான அறிக்கை.

1961-ம் ஆண்டு இரவீந்திரநாத் தாகூர் நூற்றாண்டு விழாவினை ஒட்டி இந்திய அரசு மாநிலங்களில் இரவீந்திரர் கலை அரங்கம் கட்ட வேண்டுமென்று ஒரு திட்டம் தயாரித்து அதன்படி அக்கலை அரங்கத்தை கட்டி முடிப்பதற்கு ஒவ்வொரு மாநிலத்திற்கும் இந்திய அரசின் பங்காக ரூ. 2 75 லட்சம் மானியம் அளிக்க முன் வந்தது. இத்திட்டத்தை ஏற்று இவ்வரசு சென்னையில் இரவீந்திரர் கலை அரங்கு கட்டி முடிக்க சென்னை நுங்கம்பாக்கம் கிரிம்ஸ் ரோட்டில் சுமார் 64 கிரவுண்டு நிலம் ஒதுக்கீடு செய்தது.

* 12-9-1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றது.

† 12-9-1978 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றது.